

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்) மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர். ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருவேற்காட்டில் மகளிர் குழுக்களுக்கு கடனுதவி!

திருவள்ளூர், செப்.12-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நகர்மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு 6 குழுக்களுக்கான 110 நபர்களுக்கு 1 கோடியே 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தொழில் கடனுக்கான காசோலைகளை வழங்கினார். இதில் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

## மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் கவனத்திற்கு

### தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 8-9-2024 அன்று தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழுவினருடன் பல்வேறு கழகப்பணிகள் மற்றும் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து கலந்தாலோசனை செய்தபோது அளித்த அறிவுறுத்தலின்படி,

கழக மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக "மினிட்" (நடவடிக்கை குறிப்பேடு) புத்தகங்களை, தலைமைக் கழகத்தில் ஒப்படைக்காதவர்கள், வருகிற 20.9.2024ஆம் தேதிக்குள் தலைமைக் கழகத்தில் ஒப்படைத்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 11.9.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## உடல்நலக்குறைவு ஏற்பட்டு - புதுடெல்லி - 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் தீவிர சிகிச்சை!

# மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி - விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப்பதிவு!

சென்னை, செப்.12 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு புதுடெல்லி 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதையொட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்களின் உடல்நிலை பாதிப்படைந்துள்ளது குறித்து அறிந்து கவலை கொள்கிறேன். அவர் விரைவில் நலம்பெற விழைகிறேன்.

மருத்துவர்கள் குழு அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வரும் முயற்சிகள் அவர் மீண்டும் பழைய வலிமையோடு திரும்ப உதவும் என நம்புகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஊரகப் பகுதிகளில்

# 5000 நீர் நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, செப்.12–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் 5000 நீர்நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார் என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அரசு செய்தி வெளியீடு வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, நீர் நிலைகளை தூர்வாரி, மழைநீரை சேகரித்து நீர் மேலாண்மை செய்வதற்கு முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22,051 சிறுபாசன ஏரிகளில் முதற்கட்டமாக நடப்பாண்டில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 சிறுபாசன ஏரிகளை புனரமைப்பதற்காக 5.9.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அறிவித்துள்ளார்.



இதன்படி, சிறுபாசன ஏரிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல், உபரி நீர்போளக்கி (கலிங்கு), மதகு போன்ற அனைத்துக் கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல், இணைப்பு வரத்து வாய்க்கால்களைத் தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நீர்நிலைகளைப் புனரமைப்பதால், நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். உபரி நீர் வீணாவதையும் தடுக்கும். சிறுபாசன ஏரிகளின் கொள்ளளவினை மேம்படுத்தி புனரமைப்பதன் மூலம் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டையும் தடுக்கும். பேரிடர் மேலாண்மை முயற்சிகளுக்கு இத்திட்டம் முக்கியப் பங்களிப்பு வழங்கும்.

மேம்படுத்தப்படும் ஏரிகளில் தேவைப்படும் கட்டுமானப் பணிகளான வரத்து மற்றும் போக்குக் கால்வாய், கலிங்கு, மதகு மறுசீரமைக்கும் பணிகள் தேவைப்படின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்படும். சிறுபாசன ஏரிகளின் கரைகளை பலப்படுத்தி, பசுமைச் சூழலை ஏற்படுத்த பனை மற்றும் உள்ளூர் வகை மரக்கன்றுகள் நடப்படும்.

இத்திட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம், சமூக அமைப்புகள், விவசாயிகள் சங்கம், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கூடிய 'நமக்கு நாமே' திட்டம் மூலமாகவும் மற்றும் மீதமுள்ள சிறுபாசன ஏரிகளுக்கு அரசு நிதி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் நிதியின் மூலமாகவும் பணிகள் நிறைவேற்றப்படும்.

ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்புகளுடன் சேர்ந்து சிறுபாசன ஏரிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்பு இல்லாத பட்சத்தில், புதியதாக பயன்பாட்டாளர்கள் குழுக்கள் அமைத்து புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி விவசாயிகள் பெருமளவில் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயரும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுதந்திரப் போராட்ட வீரரும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடியவருமான, தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, நேற்று (11.09.2024) புதன்கிழமை, தூத்துக்குடி வடக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அரங்கத்தில், தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றக் கழகக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நூற்றாண்டு அருங்கொடை!


முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு பெற்றுள்ளது. (03.06.1924 – 07.08.2018) இதையொட்டிப் பல்வேறு நிகழ்வுகள், வெளியீடுகள், சிறப்புகள் நடைபெற்றுள்ளன. திராவிட இயக்கம், திராவிடக் கருத்தியல், திராவிட அழகியல் முன்னோடியாகத் திகழும் கலைஞரை, இந்திய அளவில் அறிமுகப்படுத்தும் விதமாக சாகித்திய அகாதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் நூல் ஒன்றை தமிழறிஞரும் எழுத்தாளரும் கல்வியாளருமான ம. ராசேந்திரன் எழுதியுள்ளார்.

"கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழை அகப்புற நவீனத்தால் வளர்த்திருக்கிறார். மரபை விதையாக்கிக்கொண்டு வெளியுலகச் சிந்தனையை எருவாக்கிக்கொண்டு தமது கொள்கைகளை கலை, இலக்கியங்கள்வழிப் பொதுமக்களிடம் பரவலாக்கிய பணியில் தமிழை அவர் அகப்புற நவீனம் ஆக்கியிருக்கிறார். அந்த வகையில் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் படைப்பாளுமை பற்றியும் பங்களிப்பு பற்றியுமான அறிமுக நூல் இது என நூலாசிரியர் கூறுவது கருதத்தக்கது.

மிகச் சிறு வயதிலேயே எழுதவும், பேசவும் தொடங்கியவர் கலைஞர். கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், கடிதங்கள், கட்டுரைகள், உரைகள், திரைக்கதை வசனங்கள், பாடல்கள், தன் வரலாறுகள், வாழ்க்கை வரலாறுகள், சொற்பொழிவுகள்... என இலக்கிய வகைமைகள் அனைத்திலும் இலட்சக்கணக்கான பக்கங்கள் எழுதிக் குவித்தவர். பன்னிரண்டு வயதிலேயே 'செல்வ சந்திரா' எனும் நாவலைப் படைத்தவர். சுமார் எண்பதாண்டுகள் தொடர்ந்து எழுத்தில் இயங்கியவர்.

இத்தகு ஆளுமை மிக்கக் கலைஞரை சிறு நூலில் அறிமுகப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. இயக்கத்தில், இலக்கியத்தில், வாழ்க்கையில் அருகிருந்து உணர்ந்த அனுபவத்தில் கலைஞர் எனும் இலக்கியப் பேராளுமையை அற்புதமாகச் சித்திரம் போல் தீட்டி உள்ளார் நூலாசிரியர்.

கலைஞர் ஒரு படைப்பாளியாக உருவான பின்புலத்தை அவர் பிறந்த திருக்குவளை, அவரை ஈன்ற தந்தை திருமிகு. முத்துவேலர், அவரின் ஆசிரியர்கள் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், டாக்டர் சி. இலக்குனார், முத்து கிருட்டிண நாட்டாரய்யா, இராஜகோபாலப்பிள்ளை உள்ளிட்ட சூழலமைவைக் குறிப்பிட்டுச் சுட்டுகிறார்.




அடுத்து கலைஞரின் இலக்கிய நோக்கை அவரின் படைப்புகளின் சாரத்தில் வழியே அறிமுகம் செய்கிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்தவராக கலைஞரைப் பதிவு செய்கிறார். "கலை இலக்கியங்கள் எல்லாம் மக்களுக்கானவை. அவர்களின் பொழுது போக்குக்காக இல்லை: அவர்களின் முன்னேற்றத்துக்கானவை என்பதில் அவரது படைப்புகள் உறுதியாக இருக்கின்றன.

சமுதாயத்திலிருந்து பெற்ற பாடங்களைக் தெளிவாக உணர்த்து சமுதாயத்திற்குப் பயன்படும்படியாகத் தன்னைக் கலந்து திருப்பி அளிக்கும் படைப்பாளியாக கலைஞர் கருணாநிதி அவர்கள் திகழ்கிறார் என மிகச் சரியாக மதிப்பீடு செய்கிறார்.

மேலும் "அவரது படைப்புகளின் அடிப்படை பெரும்பாலும் சமுதாயச் சிந்தனையாக இருக்கிறது. சமுதாய நிலையிலும் பொருளாதார அடிப்படையிலும் எடுத்துக்காட்டி, சமுதாயத்தில்




ஏற்றத் தாழ்வுகளை நிலவும் சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்துகிற வகையில் அவரது கலை, இலக்கியப் படைப்புகள் இருக்கின்றன என வரையறை செய்கிறார்.

கலைஞரின் கலை இலக்கிய நோக்கு குறித்து 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் எழுதுகிறார்: "கலை என்பது கனி குலுங்கிடும் பெரிய தரு. அதனைத் தனியார் தோட்டத்து மரம் போல தங்கள் சொந்தப் புகழை, பொருளைக் குவித்திடப் பயன்படுத்திக் கொள்வோரும் உண்டு. அதே கலையினைக் கால்நடையாகச் செல்வோருக்குக் கனியும் நிழலும் வழங்கும் சாலை மரமாய் பொது நலனுக்கு – புதுச் சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படச் செய்வோரும் உண்டு.

ஆம். கலைஞர் பொது நலனுக்குப் பயன்படும் சாலை மரமாக நின்று காய் – கனிகளை மக்களுக்கு வழங்கினார்.

கலைஞர் மொழிப்பற்று, மொழிநேயம், இலக்கிய ஈடுபாடு, கவித்துவ மொழியாற்றல் நிரம்பப் பெற்றவர். அவரின் படைப்புகள் சமத்துவம், பெண் விடுதலை, பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துக்களை மொழிந்தன. உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் புதுமைகளைச் செய்தவர் கலைஞர்.

மக்களிடம் பரப்புரை செய்கின்ற நிலையில் எளிமையும் இனிமையும் உடையதாக அவரது மொழி நடை அமைந்தது.

இந்நூலில் அவரின் படைப்புகளின் அழகும், நுட்பமும் மிக இயல்பாகப் பதிவாகி உள்ளன. கலைஞரின் கருத்தியல் திராவிட அழகியலாக விரிவதைக் கவனப்படுத்துகிறது நூல். அதே நேரத்தில் நேரடி அரசியல் பற்றி சிறு குறிப்பும் இல்லாமல் முழுக்க இலக்கியத் தடம் பற்றி கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை ஒரு குறியீடு போல் இந்நூல் முன்வைக்கிறது.

சாதி ஏற்றத் தாழ்வுகளும் மத வேறுபாடுகளும் மக்கள் மனதிலிருந்து மாற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு தமது கலை இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். பொது நீர்நிலைகளில், சாலைகளில், மருத்துவமனைகளில், கோயில்களில், ஆலயங்களில் நிலவும் சாதிய அடக்குமுறைகளைக் கண்டிக்கும் படைப்புகளைத் தந்தவர்.

அவ்வகையில் மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்துதல், விதவை மண ஆதரவு, கலப்புமண ஆதரவு, தமிழின் விழுமிய மரபுகளைக் கொண்டாடுதல் ஆகியவை அவரது படைப்புகளில் அங்கிங்கு எனாதபடி எங்கும் விரவி இருக்கின்றன.

"நவீன கலை இலக்கியம் என்பது, கடந்தகாலக் கலை இலக்கியங்களைச் சமகாலத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தும் அக நவீனமாகவும் வெளிநாட்டுப் படைப்புகளைப் பார்த்தும் அவற்றின் செல்வாக்கிலும் தாக்கத்திலும் அவற்றைப் போன்றே தமது மொழியில் உருவாக்கும் புற நவீனமாகவும் அமைவதோடு தமது மண்ணின் வேரிலிருந்து வெளிப்படும் மரபின் தொடர்ச்சியாகவும் காலத்தின் தேவைக்கேற்ப வெளி உரத்தின் வளர்ச்சியில் உருவாகும் அகப்புற நவீனமாகவும் இருக்க வேண்டும் என்று கருதியவர்"

என்ற முடிவு தமிழ் நவீன இலக்கியத் தடத்தில் கலைஞரின் வகிபாகத்தை உணர்த்துகிறது. இந்திய ஒன்றியம் திராவிடத்தையும், தமிழையும் ஒருவித ஒவ்வாமைக் கண்கொண்டு பார்க்கும் வரலாற்றுத் தொடர்ச்சியில், கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை இந்திய அளவில் நிலைநிறுத்தும் அடையாளமாக இந்நூல் விளங்குகிறது. அவ்வகையில் இது கலைஞர் அவர்களின் நூற்றாண்டு அருங்கொடையாகவும் அமைகிறது.

**இரா.காமராசு**

(கட்டுரையாளர் : பேராசிரியர், தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)